2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வழங்கிய உத்தரவின் அடிப்படையில் இது வெளியிடப்படுகிறது.

**<u>நாட்டின் மேல் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய வழக்குத் தகவல்களை வெளியிதல்</u>**

நாட்டின் ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ள சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய வழக்குகள் பற்றிய தகவல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாதத்தில் எந்த மேல் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள / அழைக்கப்படவுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பற்றிய தகவல்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இங்கு வெளியிடப்படுகின்றன.

1998 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் (திருத்தம்) சட்டத்தின் வரையறைப்படி, தண்டனைச் சட்டக்கோவையின் கீழ்க்கண்ட பிரிவுகளின் கீழ் வரையறுக்கப்படும் குற்றங்கள்:

- 286அ- சிறுவர்களை தொடர்புபடுத்தி செய்யப்படும் ஆபாசமான வெளியீடுகள் மற்றும் காட்சிப்படுத்தல்கள்
- 288 – சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்வித்தல்
- 288அ -உடலுறவுக்கு கூட்டி விடுபவர்களாக செயற்படுவதற்குச் சிறுவர்களை வாடகைக்கு அல்லது ஊழியத்திற்கு அமர்த்துதல்
- 288ஆ – தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு செல்வதற்கு சிறுவர்களை வாடகைக்கு அல்லது ஊழியத்திற்கு அமர்த்துதல்.
- 308அ- சிறுவர்களை கொடுமைப்படுத்துதல்.
- 360அ- கூட்டிவிடுதல்
- 360ஆ- சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் பயன்களைப் பெறுதல்
- 360இ- சிறுவர்களை விலைப்படுத்தல் அல்லது வியாபாரம் செய்தல்
- 363- கற்பழிப்பு
- 364அ- முறையில்லாப் புணர்ச்சி
- 365- இயற்கைக்கு விரோதமான தவறுகள்
- 365அ- ஆட்களுக்கிடையிலான மிக்க இழிவான செயல்கள்
- 365 ஆ- பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்

மேற்குறிப்பிட்ட குற்றங்கள் ஒரு சிறுவர்களை தொடர்புபடுத்தி செய்யப்பட்டிருந்தால், அவை “சிறுவர் துஷ்பிரயோகம்” எனக் கருதப்படும்.சிறுவர் என்பவர் **18** வயதிற்குக் குறைந்த நபராக வரையறுக்கப்படுகிறார். அதன்படி, தண்டனைச் சட்டக்கோவையின் மேலே குறிப்பிடப்பட்ட **13** பிரிவுகளின் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பாக சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் பற்றிய தகவல்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பார்வைக்காக இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பான அனைத்து தகவல்களும், அவற்றை புதுப்பிப்பதற்கான தொடர்புடைய தகவல்களும், பொலீஸ் துறையின் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பிரிவின் ஊடாக, பொலீஸ்

பிரிவுகளின் கீழ் செயல்படும் 47 சிறுவர் மற்றும் பெண்கள் பணியகங்களின் ஒருங்கிணைப்புடன் பெற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும்.

தலைவர்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

| நிலுவையிலுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் | | | |
|---|---|---|---|
| | மேல் நீதிமன்றம் | **மொத்த வழக்குகளின் எண்ணிக்கை** | **2026 ஏப்ரல் மாதம் அழைக்கப்பட இருக்கின்ற வழக்குகள்** |
| **1** | அம்பாறை | 39 | 01 |
| **2** | அனுராதபுரம் | 159 | 11 |
| **3** | அவிசாவலை | 69 | 04 |
| **4** | பதுளை | 215 | 24 |
| **5** | பலபிட்டிய | 171 | 12 |
| **6** | மட்டக்களப்பு | 4 | 0 |
| **7** | சிலாபம் | 145 | 21 |
| **8** | கொழும்பு | 125 | 13 |
| **9** | எம்பிலிபிட்டிய | 15 | 04 |
| **10** | காலி | 467 | 33 |
| **11** | கம்பஹா | 231 | 36 |
| **12** | ஹம்பாந்தோட்டை | 53 | 06 |
| **13** | ஹோமாகம | 37 | 04 |
| **14** | யாழ்ப்பாணம் | 43 | 00 |
| **15** | கல்முனை | 1 | 0 |
| **16** | களுத்துறை | 241 | 11 |
| **17** | கண்டி | 418 | 46 |
| **18** | கேகாலை | 203 | 13 |
| **19** | கிளிநொச்சி | 35 | 02 |
| **20** | குளியாபிட்டிய | 161 | 19 |
| **21** | குருநாகல | 412 | 40 |
| **22** | மன்னார் | 08 | 01 |
| **23** | மாத்தளை | 83 | 16 |
| **24** | மாத்தறை | 212 | 25 |
| **25** | மொனராகலை | 80 | 09 |
| **26** | நீர்கொழும்பு | 198 | 09 |
| **27** | நுவரெலியா | 82 | 13 |
| **28** | பாணந்துறை | 39 | 04 |
| **29** | பொலன்னறுவை | 122 | 23 |
| **30** | புத்தளம் | 67 | 18 |
| **31** | இரத்தினபுரி | 165 | 34 |
| **32** | தங்கல்லை | 50 | 11 |
| **33** | திருகோணமலை | 28 | 01 |

| | | | |
|---|---|---|---|
| **34** | வவுனியா | 43 | 09 |
| **35** | மொத்தம் | **4421** | **473** |

குறிப்பு:- மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் 2026.05.08 வரை கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாக கொண்டவை.